# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயல்பாடுகள் குறித்தும் டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திருஎஸ்.பி.வேலுமணிஅவர்கள் ஆய்வு.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயல்பாடுகள் குறித்தும் பருவ மழை காலத்தில் டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க ஊரக பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் தலைமை செயலகத்தில், பழைய கூட்ட அரங்கில், இன்று (19.10.2015) விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் விநியோகம், சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், தெருவிளக்குகள், உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் (தாய்) திட்டம், ஊரக குடியிருப்பு திட்டங்களான முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம், ‘‘தானே’’ வீடு வழங்கும் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல், ஊரக சாலைப் பணிகள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் , தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புது வாழ்வு திட்டம் மூலம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு வாழ்வாதார நிதி வழங்குதல், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அமுத சுரபி நிதி வழங்குதல், இளைஞர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு பயிற்சிக்கு பின் வேலை வாய்ப்பு மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலிவுற்றோர்களுக்காக

வாழ்வாதார நிதி உதவி செய்தல் போன்ற பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், அனைத்து கிராம ஊராட்சிகளிலும் குடிநீர் விநியோகத்தை தொடர்ந்து கண்காணித்து அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைத்திடவும், தற்போது பயன்பாட்டில் உள்ள தெரு விளக்குகள் 100 சதவீதம் எரிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், ஊராட்சியில் உள்ள தெருக்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் எனவும், தெருவிளக்கு மற்றும் குடிநீர் தொடர்பாக வரும் புகார்கள் மீது போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விதி–110ன் கீழ் வெளியிட்டப்பட்ட அறிவிப்புகள் மற்றும் மானியக் கோரிக்கை அறிவிப்புகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்து அறிவிப்புகள் மீது தனிகவனம் செலுத்தி, விரைந்து செயல்படுத்தி, அனைத்துப் பணிகளையும் டிசம்பர் மாத இறுதிக்குள் நிறைவேற்ற வேண்டும் என அறிவுறுத்தினார்.

தற்போது பருவமழை காலத்தில் தமிழகத்தில் டெங்கு மற்றும் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுடன் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர், திருமதி.வி.அமுதவல்லி இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர்கள், மகளிர் திட்டம் மற்றும் புது வாழ்வு திட்ட கூடுதல் இயக்குநர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**